சென்னையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், நேற்று (05.08.2025) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்திடும் திட்டங்கள் மற்றும் சட்டங்கள் குறித்த 3 நாள் நடைபெறும் கருத்தரங்கினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இக்கருத்தரங்கில் சமூக நல இயக்குநர் திருமதி மா. செள. சங்கீதா, மாவட்ட சட்ட சேவைகள் ஆணையத்தின் நீதிபதி (ஓய்வு) திருமதி ஹேமலதா டேனியல், மூத்த வழக்கறிஞர்கள் திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி, சிவக்குமார், காவல் துறை, குழந்தைகள் கடத்தல் மற்றும் தடுப்பு பிரிவு, துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் சென்னை நந்தனம் ஆவின் இல்லத்தில் நேற்று (5.8.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம்மற்றும் மீனவர் நலத் துறை அரசு செயலாளர் டாக்டர் ந. சுப்பையன், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, ஆவின் உயர் அதிகாரிகள், அலுவலர்கள், முகவர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் கலந்து கொண்டனர்.

### பால் உற்பத்தியை அதிகரிக்க

# 6084 பால் கூட்டுறவு சங்கச் செயலாளர்களுடன் கலந்துரையாடல்!

## விற்பனையாளர்களுக்கு – அமைச்சர் மனோ தங்கராஜ் பணி நியமன ஆணைகள் வழங்கினார்!

சென்னை, ஆக.6-

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் அவர்களால் நேற்று (5.8.2025) பால் உற்பத்தியை அதிகரிக்க 6084 பால் கூட்டுறவு சங்க செயலாளர்களுடன்காணொலிக் காட்சி வாயிலாக கலந்துரையாடியதுடன், ஆவின் முகவர்களுக்கு உறைகலன், ஆவின் பாலகங்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டது.

சென்னை முழுவதும் நாளொன்றுக்கு சுமார் 15 இலட்சம் லிட்டர் பால் மற்றும் மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ.30 கோடி மதிப்பிலான பால் உப பொருட்கள், 35 ஆவின் ஜங்சன் பாலகங்கள், 200 ஆவின் பாலகங்கள் மற்றும் சுமார் 860 சில்லரை விற்பனையாளர்கள் மூலமாக பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பொதுமக்கள் மற்றும் குழந்தைகளைக் கவரும் வகையில் சென்னை மாநகரிலுள்ள 21 ஆவின் ஜங்சன் பாலகங்கள் புனரமைக்க திட்டமிடப்பட்டு முதற்கட்டமாக 12 பாலகங்களில் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் பால் உப பொருட்கள் விற்பனையை அதிகரிக்க பல்வேறு விற்பனை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் சென்னையில் பால் உப பொருட்கள் விற்பனை கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு ஜூலை மாதம் சுமார் 30% அதிகரித்துள்ளது.

மே 2025-இல் ரூ.29 கோடி, ஜூன் 2025-இல் ரூ.30.30 கோடி மற்றும் ஜூலை 2025-இல் ரூ.32.35 கோடி மதிப்பிலான பால் உப பொருட்கள் விற்பனை நடைபெற்றுள்ளது. இவ்விற்பனையானது கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் புதிய உச்சத்தை அடைந்துள்ளது என பால்வளத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் 2025-2026 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் பால்வளத் துறை மானியக் கோரிக்கையில் பால்வளத்துறை அமைச்சர் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனையை அதிகரிக்க ரூபாய் 210 இலட்சம் மதிப்பீட்டில் 600 குளிர்சாதன பெட்டிகள் வழங்கப்படும் என அறிவித்தார். அதனடிப்படையில் முதற்கட்டமாக 60 எண்ணிக்கையிலான உறைகலன்கள் கொள்முதல் செய்து 21.05.2025 அன்று வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, நேற்று (5.8.2025) பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், சென்னை நந்தனம் ஆவின் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், புதியதாக 5 நபர்களுக்கு ஆவின் பால் மொத்த விற்பனையாளர்களுக்கான நியமன ஆணைகளையும், 5 நபர்களுக்கு ஆவின் பாலகங்களுக்கான நியமன ஆணைகளையும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட ஒரு நபருக்கு தட்டச்சர் நியமன ஆணையும், ஒரு நபருக்கு பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனத்தையும், பால் உப பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு, இரண்டாம் கட்டமாக கொள்முதல் செய்யப்பட்ட 60 எண்ணிக்கையிலான உறைகலன்களை ஆவின் முகவர்களுக்கும் வழங்கினார்.

தொடர்ந்து, மாநிலம் முழுவதும் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 6084 சங்க செயலாளர்கள் உடன் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பால் வழங்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் வங்கி கடன் உதவி பெற்று வழங்குவது, அனைத்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களையும் பொருளாதாரத்தில் நிலைத்த தன்மையுடைய சங்கங்களாக உருவாக்குவது மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை பல்வேறு சேவை மையங்களாக மாற்றுவது அகியவை குறித்து பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் அனைத்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க செயலாளர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க செயலாளர்களின் கோரிக்கைகள் மற்றும் கருத்துகள் குறித்து கேட்டறியப்பட்டது. மேலும் பால் கொள்முதல் அதிகரிப்பதற்கான உத்திகள், புதிய உறுப்பினர் சேர்க்கை, பால் உற்பத்தியாளர்களுக்கு தங்கு தடையின்றி பால் பணப்பட்டுவாடா செய்தல், ரூ.3/- ஊக்கத்தொகை வழங்குதல், 100% நிகழிட ஒப்புகை வழங்குதல்,கறவை மாடுகளுக்கு சரிவிகித உணவு வழங்குதல், கறவை இனங்களுக்கு உரிய இடைவெளியில் செயற்கை முறை கருவூட்டல் செய்தல் ஆகியவை குறித்து துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பால்வளத் துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, அரசு செயலாளர், மருத்துவர் ந.சுப்பையன், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, ஆவின் உயர் அதிகாரிகள், அலுவலர்கள், முகவர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் ஆர். ராஜேந்திரன் – மேயர் அ.ராமச்சந்திரன் – ரெ.தங்கம் பங்கேற்பு!

# சேலம் அன்பின் கரங்கள் மாற்றுத்திறனாளிகள் அறக்கட்டளை சார்பில் முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு நன்றி - பாராட்டு விழா - நல உதவிகள்!

## நிகழ்ச்சி ஏற்பாடு: அறக்கட்டளை நிர்வாக தலைவர் பி.மணிகண்டன்!

சேலம், ஆக.6

உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன முறையில் பிரதிநிதித்துவம் வழங்கியதுடன், ஏராளமான வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை வாரி வழங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி பாராட்டு விழாவும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் சேலம் அன்பின் கரங்கள் அறக்கட்டளை சார்பாக இன்று 6.8.2025 புதன்கிழமை காலை 10 மணி அளவில் சேலம்,கோட்டை சூசன் அம்மாள் கல்யாண மண்டத்தில் அறக்கட்டளையின் நிர்வாக தலைவர் பி. மணிகண்டன் தலைமையில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் சேலம் மாநகராட்சி மேயர் அ.ராமச்சந்திரன், கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநிலத் தலைவர் ரெ.தங்கம் ஆகியோர் பங்கேற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் பொற்கால ஆட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு கொண்டு வந்த பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை குறித்தும், அதன் பயன் பாட்டு குறித்தும் எடுத்து ரைப்பதுடன், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாற்றுத் திறனாளிகள் சார்பாக நன்றி தெரிவித்து வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

இவ்விழாவில், கோட்டை பகுதி கழக செயலாளர் சையது இப்ராஹிம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலர் பி.செண்பகவல்லி, ஜென்னிஸ் கல்வி அறக்கட்டளை தலைவர் டாக்டர் கே.கர்லின் எபி, கமலம் மறுவாழ்வு மையம் மற்றும் எம்மீஸ் சிறப்பு பள்ளி தாளாளர் ஹேமா பிரைட், சேலம் மாவட்ட உதவிக்கரம் மாற்றுத்திறனாளிகள் நல் வாழ்வு சங்கத் தலைவர் டாக்டர் பி.அத்தியண்ணா, தமிழ் நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில இணை பொதுச்செயலாளர் என். அம்பாள் குமார், டாக்டர் ஜி.ராஜசேகரன் எம்டி.,

பேராசிரியர் (முனைவர்) தா.ஜாகிர் உசேன், மாவட்ட முதன்மை அலுவலர் பி. சந்திரசேகர், சி. மணிகண்டன் சிஎஸ்ஆர், டாக்டர் பி. காயத்ரி, வெ.சரவண குமார் ஜெஈஒ, டாக்டர் மாலினி, டாக்டர் சந்திரசேகர், ஆசிரியர் க.ஷீருன், இம்மானுவேல் சார்லஸ், எம்.ஒய்.முகமது காசிம்,

சி.சஸ்டின்ராஜ், பி. டேவிட் ராஜன், அலெக்ஸ், ஜி.ராஜ்குமார், டி.சியாம் எபி னேசர், வெற்றிவேல் பிரகாஷ், ஹபித், ஜெ. எபி இன்பகுமார் மற்றும் பல்வேறு தொண்டு நிறுவனங்களும், சமூக ஆர்வலர்களும் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

அன்பின் கரங்கள் அறக்கட்டளை நிர்வாகிகளான: எ.ரவி தங்கதுரை, சி.சின்ன ராஜா - சூர்யா, என்.ஷாம் சுந்தர் ஆகியோர் விழா ஏற்பாடு செய்கின்றனர். முன்னதாக சி.சின்னராஜா - சூர்யா வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

விழா நிறைவில் அன்பின் கரங்கள் அறக்கட்டளை பொருளாளர் சி. விஜயகுமார் நன்றியுரையாற்றுகிறார்.

### கழகத் தலைவர் – முதல்வர் தலைமையில்

### ஆகஸ்ட் 7 அன்று முத்தமிழறிஞர் கலைஞரின் 7வது நினைவு நாள் - அமைதிப் பேரணி!

# திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் – வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் வேண்டுகோள்!

திருவள்ளூர், ஆக.06;

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூ ர் செயலாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் மீஞ்சூர் ஒன்றியம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது இதில்

அதுசமய இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் பி.ஜெ. மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ. குணசேகரன், டாக்டர் பரிமளம்விஸ்வநாதன், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புறாற்றினார்

அப்போது பேசுவையில்

பேரறிஞர் பெருந்தகை அண்ணா உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அவர் கட்டமைத்த ஆட்சியையும் கட்டிக்காத்து, அரை நூற்றாண்டு காலம் இந்த இயக்கத்திற்குத் தலைமை தாங்கி, 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 19 ஆண்டுகாலம் சிறப்பான நிர்வாகத்தை அளித்து, நவீனத் தமிழ்நாட்டைக் கட்டி எழுப்பிய சிற்பியான நம் உயிர்நிகர் தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு

முத்தமிறிஞர் கலைஞரின் நினைவைப் போற்றுவோம் என தொண்டர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அழைப்பு ஏற்று

வங்கக் கடற்கரையில் தன் அண்ணனுடன் நிரந்தர ஓய்வு கொண்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடம் நோக்கி நாளை ஆகஸ்ட் 7 அன்று காலை 7 மணியவில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அமைதிப் பேரணி சென்னை அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் இருந்து புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார்

எனவே திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் நடைபெறும் பேரணியில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் தெரிவித்து கொண்டார்

நிகழ்ச்சி முன்னதாக முத்தமிறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் மகனும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சகோதரரமான மு.க.முத்து அவர்களின் மறைவிற்கு கூட்டத்தில் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தெரிவித்தனர்

மாநில நிர்வாகிகள் சி.எச். சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ராபர்ட்ராஜதுரை, ஏ.கே.சுரேஷ், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், மு. மணிபாலன், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேல், ஜான் பொன்னுசாமி, ந.பரிமளம், கா.சு.ஜெகதீசன், மு.முரளிதரன், ஜி.ரவிக்குமார், ஆ. ராஜா, ஏ.ஆர்.டி.உதயசூரியன், வே.ஆனந்த் குமார், இரா.அறிவழகன், அபிராமி குமர வேல், பி.முத்து, உள்பட மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கழக இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் முடிவில் முன்னாள் மாவட்ட கழக பிரதிநிதி பா.து.தமிழரசன் நன்றி கூறினார்

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் – அமைதிப் பேரணி!

# இசையஞ்சலி நிகழ்ச்சி! சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணியினர் பங்கேற்பீர்!

## அமைப்பாளர் கொட்டிவாக்கம் ம.பார்த்திபன் வேண்டுகோள்!

சென்னை, ஆக.6-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாள் கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஆகஸ்டு - 7 அன்று அமைதி பேரணி நடைபெற உள்ளது.

சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் கொட்டிவாக்கம் ம.பார்த்திபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுக்கோளுக்கிணங்க தமிழுக்கு செம்மொழி அங்கீகாரம், அய்யன் திருவள்ளுவருக்கு வள்ளுவர் கோட்டம், கன்னியாகுமரியில் 133 அடி கொண்ட வானுயர அய்யன் திருவள்ளுவர் சிலை, பூம்புகார் கலைக்கூடம், இப்படி தமிழுக்கு பெருமை சேர்த்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஆகஸ்டு-7 வியாழக்கிழமை யன்று காலை 7 மணியளவில் சென்னை அண்ணாசாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து அமைதிப்பேரணி, கழகத் தலைவர், தமிழக முதல்வர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்த உள்ளார்.

அன்று மாலை 5 மணியளவில் நுங்கம்பாக்கம் வள்ளுவர்கோட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நடைபெறும் முத்தமிழறிஞருக்கு இசையஞ்சலி கலைஞர் வார்த்த காவிய பாடல்கள் நடைபெறும் நிகழ்ச்சிக்கும் நம்முடைய சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணியை சார்ந்த மாவட்ட புரவலர், மாவட்ட தலைவர், மாவட்டத்துணைத்தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி, ஒன்றிய புரவலர்கள், பகுதி தலைவர்கள், பகுதி துணைத்தலைவர்கள், ஒன்றிய தலைவர்கள், ஒன்றிய துணைத்தலைவர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணைஅமைப்பா ளர்கள்,

ஒன்றிய அமைப்பாளர்கள், ஒன்றிய துணை அமைப்பாளர்கள், ஆகியோர் தவறாமல் இந்நிகழ்வில் குறிப்பிட்ட நேரத்திற்குள் தவறாமல் கலந்துகொண்டு அமைதிப்பேரணியையும், முத்தமிழறிஞருக்கு இசையஞ்சலியும் சிறப்பித்து தருமாறு சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் கொட்டிவாக்கம் ம.பார்த்திபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் மு. பகலவன் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கழகத் தலைவர் – முதல்வர் தலைமையில் நாளை ஆகஸ்ட் 7 அன்று முத்தமிழறிஞர் கலைஞரின் 7வது நினைவு நாள் – அமைதிப் பேரணியில் கலந்து கொள்வது குறித்து சிறப்புரையாற்றினார் உடன் பி.ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி. ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ராபர்ட்ராஜதுரை, ஏ.கே.சுரேஷ், டி.கே.சந்திரசேகர், மு.மணிபாலன், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேல், ஜான்பொன்னுசாமி, ந.பரிமளம், கா.சு.ஜெகதீசன், மு.முரளிதரன், ஜி.ரவிக்குமார், ஆ.ராஜா, ஏ.ஆர்.டி.உதயசூரியன், வே.ஆனந்க்குமார், இரா.அறிவழகன், அபிராமிகுமரவேல், பி.முத்து, உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட இரா.கி.பேட்டை ஒன்றியம் வங்கனூர் கிராமத்தில் 'SASCI' திட்டத்தின் கீழ் ரூ.3 46 கோடி மதிப்பீட்டில் வங்கனூர் முதல் C.G.N. கண்டிகை வரை செல்லும் தார் சாலை அமைக்கும் பணியினை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன்,துவக்கி வைத்தார். உடன் பா.சம்பத், சி.என்.சண்முகம், பெ.பழனி, மா.இரகு, மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.